தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை-600 032

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)

ஆணை எண். 27 /மா/2020

நாள் 09.12.2021

திரு B. ரமேஷ்,
சென்னை – முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
14-வது மண்டலம்,
பெருநகர சென்னை மாநகராட்சி
சென்னை – எதிர்மனுதாரர்

பெருநகர சென்னை மாநகராட்சி, உள்ளகரம், ராஜேஸ்வரி நகர், பிரதான சாலை, பிளாட் எண்.32 என்ற முகவரியில் வசிக்கும் திரு B. ரமேஷ், வழக்குரைஞர், என்பவரது 11.02.2020 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 12.02.2020-ல் பெறப்பட்டு, 27/2020 என எண்ணிடப்பட்டு, முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு, பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் -14, உள்ளகரம், ராஜேஸ்வரி நகர், பிரதான சாலை, பிளாட் எண்.32 என்ற முகவரியில் வசிக்கும் திரு B. ரமேஷ் என்பவர் தனது வீடு பிளாட் எண்.32, ராஜேஸ்வரி நகர் பிரதான சாலை, உள்ளகரம், சென்னை – 600 091 என்ற முகவரியிலுள்ள ஸ்ரீ முருகன் இல்லம் என்ற பெயரிலுள்ள கட்டிடத்தில் உள்ளது என்றும், கட்டிடத்தில் மொத்தம் 6

குடியிருப்புகள் உள்ளன என்றும் கட்டிடத்தின் குடியிருப்பில் தனது தாயாருடன் வசித்து வருவதாகவும் மேற்படி இரண்டாவது தளத்திலுள்ள S1 குடியிருப்பை பாஸ்கர் மற்றும் வடிவேலன் ஆகியவர்களிடமிருந்து தானும் தனது தாயாரும் கூட்டாக கிரையம் பெற்று அனுபவித்து வருவதாகவும் தனது குடியிருப்புக்கு சென்னை மாநகராட்சி மண்டல அலுவலர்களால் சொத்து வரி விதிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். மேலும் தனது சொத்து வரி விதிப்பு எண்.14–169–42679–000 என்றும் தெரிவித்துள்ளார். தனது கட்டிடத்திற்கு சென்னை மாநகராட்சி மண்டலம் 14ஐச் சேர்ந்த உதவி பொறியாளர் (Division 169) மற்றும் உதவி செயற்பொறியாளர் (Unit 42) ஆகியோர் கட்டிடத்தை 07.12.2019 அன்று ஆய்வு செய்ததாகவும், தங்களது கட்டிடத்தில் நடைபெற்று வரும் பணிகளை நிறுத்தி வைக்குமாறு stop work notice/notice calling for approved plan அறிவிப்பாணை கொடுத்துள்ளனர் என்றும் இந்த அறிவிப்பானது மேற்படி தனது குடியிருப்பை தனக்கு விற்பனை செய்த திரு பாஸ்கர் அவர்களிடம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல அலுவலர்களால் வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

2. மேலும் தனது கட்டிடத்தில் எந்த கட்டுமான வேலையும் தற்போது நடைபெறவில்லை என்றும், கட்டிடத்தில் உள்ள குடியிருப்புகளின் உரிமையாளர்களை அச்சுறுத்தி பணம் பறிக்கும் நோக்கில் மேற்படி சென்னை மாநகராட்சி அதிகாரிகள் அறிவிப்பு கொடுத்துள்ளனர் என்றும் தெரிவித்துள்ளார். மேலும் தனது கட்டிடத்தை ஆய்வு செய்வதற்கு முன்பு எந்த முன்னறிவிப்பும் தான் உள்பட தனது கட்டிடத்திலுள்ள குடியிருப்புகளின் உரிமையாளர்களுக்கு கொடுக்கவில்லை என்றும் இவர்கள் தனது கட்டிடத்தில் தங்களது ஆட்களுடன் கடந்த 07.12.2019 அன்று சட்டத்திற்கு புறம்பாக உள்ளே நுழைந்து (criminal trespass) ஆய்வு செய்துள்ளனர் என்றும் இந்த விவரம் அவர்கள் அளித்த அறிவிப்பிலிருந்து தனக்கு தெரிய வந்தது. (Notice No. 14/00273/2019 dated 07.12.2019). மேற்படி சென்னை மாநகராட்சி அதிகாரிகளின் செயல் இந்திய அரசியலமைப்பு சட்ட உறுபுகள் 14 மற்றும் 21ல் வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளுக்கு முரணானதாகும்.

3. மேலும் தனது கட்டிடத்திற்குள் அத்துமீறி நுழைந்த சென்னை மாநகராட்சி மண்டலம் –14ஐச் சேர்ந்த உதவி பொறியாளர் (Division 169) மற்றும் உதவி செயற்பொறியாளர் (Unit 42) ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி சென்னை மடிப்பாக்கம் காவல் நிலையத்தில் தான் அளித்த புகாருக்கு பதிலளித்துள்ள மேற்படி உதவி பொறியாளர், திரு சோ.குமார், எண்.5, வேம்புலி பண்ணைக்காரன் தெரு,

உள்ளகரம், சென்னை என்பவர் தகவல் பெறும் உரிமைச்சட்டத்தின் கீழ் அளித்த விண்ணப்பத்திற்கு பதிலளிக்கும் பொருட்டு என்னுடைய கட்டிடத்தின் அனுமதிக்கப்பட்ட கட்டிட வரைபட நகல் கேட்கும் தாக்கீது மட்டுமே 11.12.2019 அன்று வழங்கப்பட்டது என்றும் கட்டிடத்தின் உள்ளே அத்து மீறி நுழையவோ, அளவீடு செய்யவோ மாநகராட்சி அலுவலர்கள் செல்லவில்லை என காவல்துறைக்கு பதில் எழுதி கொடுத்துள்ளார். மேற்படி சென்னை மாநகராட்சி உதவி பொறியாளர் (Division 169) அவர்களின் பதில் சட்டப்படி ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. இவரும் உதவி செயற்பொறியாளர் (Unit 42) அவர்களும் எனது கட்டிடத்திற்கு 07.12.2019 தேதியிட்டு அளித்த அறிவிப்பை பார்க்கும்போது இவரின் பதில் எவ்வளவு மோசமானது மற்றும் ஒருதலைபட்சமானது என தெரிய வரும். தனது கட்டிடத்தில் உள்ள குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டு அவற்றிற்கு சொத்துவரி பெருநகர சென்னை மாநகராட்சி 14–வது மண்டல அதிகாரிகளால் விதிக்கப்பட்டுள்ளது. சொத்து வரி விதிக்கப்பட்ட ஒரு கட்டிடத்திற்கான கட்டிட அனுமதி வரைபட நகல் மற்றும் கட்டிட அனுமதி தொடர்பான ஆவணங்கள் பெருநகர சென்னை மாநகராட்சி 14–வது மண்டல அலுவலகத்தில் உள்ளது. இவ்வாறு ஆவணங்களை தங்கள் வசம் வைத்துக் கொண்டு கட்டிட உரிமையாளர்களை அச்சுறுத்தும் நோக்கில் பெருநகர சென்னை மாநகராட்சி 14–வது மண்டல அதிகாரிகள் தங்கள் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து பயன்படுத்தி வருவது மேற்படி நிகழ்வின் மூலம் தெளிவாக தெரியவருகிறது என தெரிவித்துள்ளார்.

4. மேற்படி சென்னை மாநகராட்சி அதிகாரிகளின் கடமை தவறிய செயலுக்கு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14ன் மண்டல அலுவலர் தீங்கியல் சட்டப்படி (Law of torts) கூட்டு பொறுப்பாவார். மேற்படி சென்னை உள்ளகரத்தைச் சேர்ந்த சோ.குமார் என்பவர் தகவல் பெறும் உரிமை சட்டத்தின் கீழ் தகவல் கேட்டு அளித்த விண்ணப்பத்திற்கு கடமை தவறாமல் பதில் அளிக்கும் பொருட்டு கட்டி முடித்து சொத்து வரி விதிக்கப்பட்ட தனது கட்டிடத்திற்கு stop work notice/ notice calling for approved plan கேட்டு தாக்கீது அனுப்பிய மேற்படி அதிகாரிகள் அதேபோன்று மேற்படி சோ.குமார் என்பவர் வசிக்கும் வீடு சென்னை மாநகராட்சி அனுமதி பெற்று கட்டப்பட்டதா? என்ற என்னுடைய கேள்விக்கு சென்னை மாநகராட்சி கட்டிட அனுமதி எதுவும் வழங்கவில்லை என பெருநகர சென்னை மாநகராட்சி 14–வது மண்டல, பொது தகவல் அலுவலர் பதிலளித்துள்ளார். மேற்படி திரு.சோ. குமார் வசிக்கும் வீட்டின் அனுமதிக்கப்பட்ட கட்டிட வரைபட நகல் கேட்கும் தாக்கீதை இன்று வரை பெருநகர சென்னை மாநகராட்சி 14–வது மண்டலத்தை சார்ந்த அலுவலர்கள் அனுப்பவில்லை. இதிலிருந்து மேற்படி சென்னை மாநகராட்சி

மண்டல அலுவலர்கள் பாரபட்சமாக செயல்படுவது தெரியவருகிறது என தெரிவித்துள்ளார்.

5. மேற்படி திரு சோ.குமார், சமூக ஆர்வலர் என்ற பெயரில் பெருநகர சென்னை மாநகராட்சி 14–வது மண்டல பொது தகவல் அலுவலரிடம் கட்டிட அனுமதி தொடர்பான ஆவணங்கள் கேட்டு ஒவ்வொரு மாதமும் சுமார் 6 தகவல் பெறும் விண்ணப்பங்களை தாக்கல் செய்கிறார். இவர் தொடர்ச்சியாக இந்த வேலையை பல ஆண்டுகளாக செய்து வருகிறார். மேற்படி திரு சோ.குமாரின் உண்மையான நோக்கம் தகவல் பெறுவதல்ல, தகவல் பெறும் உரிமைச்சட்டத்தை தவறாக பயன்படுத்தி கட்டிட உரிமையாளர்களை அச்சுறுத்தி பணம் பறிப்பதாகும். இவரின் இந்த தவறான செயலுக்கு பெருநகர சென்னை மாநகராட்சி 14–வது மண்டல அலுவலர்களும் பொது தகவல் அலுவலரும் முழுமையாக ஒத்துழைத்து வருகிறார்கள். இவர் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் கேட்கும் கேள்விகள் ஏற்கனவே பலமுறை கேட்டதாகும். தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் சென்னை மாநகராட்சி 14–வது மண்டல அலுவலகத்தில் கடந்த 03.02.2020 அன்று நான் பார்வையிட்டபோது இந்த விவரம் எனக்கு தெரியவந்தது. மேற்படி திரு சோ. குமார் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தை தவறாக பயன்படுத்துவது குறித்து பெருநகர சென்னை மாநகராட்சி 14–வது மண்டல அதிகாரிகள் சென்னை மாநகராட்சி ஆணையரின் கவனத்திற்கும், தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் கவனத்திற்கும் இதுவரை எடுத்துச் செல்லவில்லை என தெரிவித்துள்ளார்.

6. மேற்படி திரு சோ.குமார் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் கட்டிட அனுமதி தொடர்பான ஆவணங்களை கேட்கும்போது சுறுசுறுப்பாக செயல்படும் பெருநகர சென்னை மாநகராட்சி 14–வது மண்டல அதிகாரிகள் இதேபோன்று மற்ற நபர்கள் தகவல் பெறும் உரிமைச்சட்டத்தின் கீழ் கட்டிட அனுமதி தொடர்பான ஆவணங்களைக் கேட்கும்போது அதனை தராமல் இழுத்தடித்து வருகிறார்கள். மேற்படி திரு சோ.குமாருக்காக பெருநகர சென்னை மாநகராட்சி 14–வது மண்டல அதிகாரிகள் அரசு இயந்திரத்தை தவறாக பயன்படுத்தி அறிவிப்பு கொடுத்து கட்டிட உரிமையாளர்களை அச்சுறுத்துகிறார்கள். மேற்படி திரு சோ. குமார் தற்போது வசித்து வரும் உள்ளகரம் வீட்டிற்கு எந்தவித கட்டிட அனுமதியும் சென்னை மாநகராட்சி தரப்பில் இதுவரை கொடுக்கப்படாத பட்சத்தில் அவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்க பெருநகர சென்னை மாநகராட்சி, 14–வது மண்டல அதிகாரிகள் தயங்குகிறார்கள்.மேற்படி திரு சோ. குமாரின் கட்டிட அனுமதி இல்லாத வீட்டிற்கு சென்னை மாநகராட்சி சொத்து வரி வசூலித்து வருவதாக நான் அறிகிறேன். இந்த

சொத்து வரி விதிப்பை ரத்து செய்ய எந்தவித நடவடிக்கையையும் சென்னை மாநகராட்சி 14–வது மண்டல அதிகாரிகள் இதுவரை எடுக்கவில்லை.

7. பெருநகர சென்னை மாநகராட்சி 14–வது மண்டல பொது தகவல் அலுவலரிடம் அண்மையில் தகவல் பெறும் உரிமைச் சட்டம் வாயிலாக கேட்ட பெரும்பாலான கேள்விகளுக்கு எனக்கு தகவல் தராமல் இழுத்தடித்து வருகிறார்கள். தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழான பெரும்பாலான கேள்விகளுக்கு பொறுப்பற்ற முறையில் பதிலளித்து வருகிறார்கள். உதாரணமாக, பெருநகர சென்னை மாநகராட்சி 14–வது மண்டலத்திற்கு உட்பட்ட பகுதிகளில் எத்தனை கட்டிடங்கள் மாநகராட்சியில் கட்டிட அனுமதி பெற்றவாறு உள்ளது என்ற விவரத்தை தாருங்கள் என நான் கேட்டதற்கு அதுபோன்ற தகவல் எதுவும் சென்னை மாநகராட்சியில் இல்லை என பொறுப்பற்ற முறையில் பதிலளித்துள்ளார்கள். எந்த வித தகவலையும் ஆவணங்களையும் சேமித்து வைத்து அவற்றை பராமரிக்காமல் பெருநகர சென்னை மாநகராட்சி 14–வது மண்டல அதிகாரிகள் குத்துமதிப்பாக அரசு நிர்வாகத்தை நடத்தி வருகிறார்கள். கட்டிடம் நிறைவு பெற்ற பிறகு ஆய்வு செய்த அறிக்கை நகல்களை தாருங்கள் எனக்கேட்டால், அதுபோன்று எதுவுமில்லை என சென்னை மாநகராட்சி 14–வது மண்டல அதிகாரிகள் பதிலளித்துள்ளார்கள். கட்டிடம் கட்டும்போது சென்னை மாநகராட்சியிடம் அனுமதி பெற்று கட்டிடம் கட்டப்படுகிறது. கட்டிடப்பணி நிறைவு பெற்ற பிறகு சென்னை மாநகராட்சி அதிகாரிகள் அந்த கட்டிடத்தை ஆய்வு செய்த பிறகே உரிய சொத்து வரி அந்த கட்டிடத்திற்கு விதிக்கப்படுகிறது. மேலும், கட்டிட பணி நிறைவு சான்று கோரி கட்டிட உரிமையாளர் விண்ணப்பித்தால் மட்டுமே கட்டிடப்பணி நிறைவு சான்று அளிக்கப்படும் என சென்னை மாநகராட்சி 14–வது மண்டல பொது தகவல் அலுவலர் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தில் பதிலளித்திருப்பது சட்ட விரோதமானதாகும். கட்டிடப் பணி நிறைவு பெற்றதை சென்னை மாநகராட்சி அதிகாரிகள் ஆய்வு செய்த பிறகு கட்டிடப்பணி நிறைவு சான்றை கட்டிட உரிமையாளர்களுக்கு தானாகவே சென்னை மாநகராட்சி அதிகாரிகள் வழங்கவேண்டும். இவர்கள் எப்படி கட்டிடங்களுக்கு எந்தவித ஆவணமும் இல்லாமல் சொத்து வரி விதிக்கிறார்கள் என்பது புரியாத புதிராக உள்ளது.

8. மேலும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14க்குட்பட்ட பகுதிகள் பலவற்றில் அனுமதி பெறாமல் கட்டப்பட்ட பல கட்டிடங்களுக்கு பெருநகர சென்னை மாநகராட்சி 14–வது மண்டல அதிகாரிகள் சொத்து வரி வசூலித்து வருகிறார்கள். மண்டலம் 14க்குட்பட்ட பகுதியில் உண்மையாக பல விதி மீறல் கட்டிடங்கள்

உள்ளன. இந்த கட்டிடங்கள் மீது அதிகாரிகள் எந்தவித நடவடிக்கையும் எடுப்பதில்லை. இவர்களால் அரசுக்கு தேவையற்ற நிதி இழப்பு ஏற்படுகிறது. மேலும், பாரபட்சமாக அரசு நிர்வாக இயந்திரத்தை பெருநகர சென்னை மாநகராட்சி 14–வது மண்டல அதிகாரிகள் பயன்படுத்தி வருகிறார்கள். சென்னை மாநகராட்சி 14–வது மண்டலத்தில் காணப்படும் விதி மீறல் கட்டிடங்கள் மீது சென்னை மாநகராட்சி 14–வது மண்டல அதிகாரிகள் ஒழுங்காக நடவடிக்கை எடுப்பதில்லை. விதி மீறல் கட்டிடங்களுக்கு விதி மீறல் அறிவிப்புக்களை சென்னை மாநகராட்சி அதிகாரிகள் (மண்டலம் 14) அனுப்புவதுடன் சரி. விதி மீறல் கட்டிடங்கள் மீது தொடர் சட்ட நடவடிக்கையை சென்னை மாநகராட்சி மண்டல அதிகாரிகள் எடுப்பதில்லை என தெரிவித்து உரிய அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க கோரி இம்முறை மன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

9. பெருநகர சென்னை மாநகராட்சி 14–வது மண்டல அலுவலர் மற்றும் முறையீட்டு மனுதாரர் ஆகியோர் 04.08.2021 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 05.07.2021 தேதியிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது. மனுதாரர் அன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜராகி கீழ்கண்டவாறு தமது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

“ எனது குடியிருப்புக்கு சென்னை மாநகராட்சி மண்டலம் 14–ன் மூலம் சொத்து வரி ஏற்கனவே விதிக்கப்பட்ட நிலையில் 2019 ஆம் ஆண்டு Stop Work Notice சென்னை மாநகராட்சியால் அளிக்கப்பட்டுள்ளது. உள்ளகரம் புழுதிவாக்கத்தைச் சேர்ந்த திரு குமார் என்பவரின் தூண்டுதலின் பேரில் எனக்கு மேற்கண்ட வேலைநிறுத்த அறிவிக்கை வழங்கப்பட்டுள்ளது. அவ்வறிக்கையை மாநகராட்சியால் திரும்பப் பெற்றிடவும், கையூட்டு பெற்றுக் கொண்டு ஒருதலைபட்சமாக நடந்து கொள்ளும் மாநகராட்சி அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுத்திடவும் மேலும் எனது 11.02.2020 நாளிட்ட முறையீட்டு மனுவில் கண்டுள்ள விவரங்களையே எனது வாக்குமூலமாக இம்முறைமன்றத்தின் முன் பதிவு செய்து கொள்ள வேண்டிக்கொள்கிறேன்” என தெரிவித்துள்ளார். மேலும் சொத்துவரி செலுத்தியதற்கான ரசீதின் நகலினையும் இம்முறைமன்ற நடுவத்தின் முன் சமர்ப்பிக்கிறேன் ” என்றும் தெரிவித்துள்ளார்.

10. மண்டல அலுவலர், மண்டலம் –14 அவர்கள் 04.08.2021 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகி கீழ்கண்டவாறு தமது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

“ மனுதாரர் திரு பி.ரமேஷ் என்பவர் தனது மனுவில் குறிப்பிட்டவாறு மனுதாரர் வசிக்கும் பிளாட் எண்.32, ராஜேஸ்வரி நகர் பிரதான சாலை,உள்ளகரம்,

சென்னை–600091–ல் உள்ள வீட்டிற்கு ஏற்கனவே சொத்து வரி விதிக்கப்பட்டுள்ளது என்றும் அதன் பின்னர் stop work notice அளிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். ஆனால், stop work notice மட்டுமல்லாமல் அதனுடன் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகலையும் மாநகராட்சிக்கு அளிக்கும் பொருட்டு அறிவிப்பு வெளியிடப்பட்டது. இது நடைமுறையில் உள்ள செயலாகும். மேலும், மனுதாரர் கோரிய அனைத்து விவரங்களும் மனுதாரருக்கு ஏற்கனவே அளிக்கப்பட்டு விட்டது. மேலும் மண்டல அலுவலகத்தில் உள்ள பதிவேடுகளை பார்வையிடவும் மனுதாரர் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்கின்ற விவரத்தை இம்முறைமன்றத்தின் முன் எனது வாக்குமூலமாக தெரிவித்துக் கொள்கிறேன். இது தொடர்பாக 13.07.2021 நாளிட்ட விரிவான அறிக்கையினை இம்முறை மன்றத்தில் சமர்ப்பித்துள்ளேன். அதனையும் எனது வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளவும் இம்முறை மன்றத்தை வேண்டிக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

11. மண்டல அலுவலர், மண்டலம் –14 அவர்களின் 13.07.2021 நாளிட்ட விரிவான அறிக்கையில் எண்.5, வேம்புலி பண்ணைக்காரன் தெரு, உள்ளகரம், சென்னை – 600 091 என்ற முகவரியில் வசித்து வரும் திரு சோ.குமார் அவர்கள் 06.12.2019 அன்று தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005 பிரிவு 6(1)ன் கீழ் உள்ளகரம் கிராமம், சர்வே எண். 75/1, 76/1, 76/2 , மனை எண்.32, ராஜேஸ்வரி நகர் பிரதான சாலையில் அமைந்துள்ள கட்டிடத்தின் வரைபட ஒப்புதல் பெறப்பட்ட விண்ணப்பம், அதன் இணைப்புகள் மற்றும் அங்கீகார ஆணை வழங்கப்பட்ட கோப்பின் அனைத்து பக்கங்களின் ஒளிநகல்களை கோரியிருந்தார். திரு சோ.குமார் அவர்களின் தகவல் அறியும் உரிமைச்சட்ட மனுவிற்கு பதில் அளிக்க பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் –14, கோட்டம்–169 சார்ந்த இளநிலை பொறியாளர் (பொறுப்பு), திரு A.V.K. கமல்ராஜ் அவர்கள் இந்த கட்டிடத்தை 07.12.2019 அன்று பார்வையிட்டு stop work notice/notice calling for approved plan Notice Under Section 56 (1) and 57 read with Section 85 of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act. 35 of 1972 as amended by Act 61 of 2008) vide Notice No. 14/00273/2019 என்ற முதல் கட்ட தாக்கீது அளிக்கப்பட்டுள்ளது. இந்த தாக்கீதை திரு T. பாஸ்கர் என்பவர் 12.12.2019 அன்று பெற்றுக்கொண்டுள்ளார். இதுவரை இத்தாக்கீதில் கோரிய விவரம் ஏதும் இவ்வலுவலகத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை என்றும் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 14–ல் திரு B. ரமேஷ் அவர்கள் குறிப்பிட்டுள்ள காவல் துறை சம்பந்தமாக புகார்கள் மண்டலம் 14 அலுவலகத்திலிருந்து பெறப்படவில்லை என்றும் பெரு நகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14, கோட்டம் 169, இளநிலை பொறியாளர் (பொறுப்பு) அவர்கள்

விதிகளுக்குட்பட்டு கட்டிடத்திற்கான Notice மட்டுமே வழங்கியுள்ளார். இதில் எவ்வித அத்துமீறல் நடவடிக்கையும் இல்லை என்றும் மேலும் திரு சோ.குமார் அவர்களின் தகவல் அறியும் உரிமைச் சட்ட மனுவிற்கு கட்டிட விண்ணப்பம் மூன்றாம் தரப்பினரின் ஒப்புதல் பெற்று தகவல் வழங்கப்படும் என பதில் அளிக்கப்பட்டுள்ளது. இதில் அதிகார துஷ்பிரயோகம் ஏதுமில்லை. திரு B. ரமேஷ் அவர்களின் 12.12.2019 நாளிட்ட தகவல் அறியும் உரிமைச்சட்ட மனுவிற்கு பதில் 03.01.2020 அன்று இவ்வலுவலகம் மூலம் தகவல் அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி திரு B. ரமேஷ் அவர்கள் மண்டலம் 14ல் நான்கு ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட தணிக்கை மற்றும் தணிக்கை ஆட்சேபனை அறிக்கைகளை தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005 பிரிவு 6 (1) ன் படி பார்வையிட அனுமதி கோரியதற்கு மண்டலம் 14 அலுவலகத்தில் முன்னறிவிப்புடன் அலுவலக நேரங்களில் பார்வையிடலாம் என பதில் அளிக்கப்பட்டது. மேலும் திரு B. ரமேஷ் அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 14ல் திரு சோ.குமார் அவர்களால் தகவல் அறியும் உரிமைச்சட்டம் வாயிலாக அனுப்பிய விண்ணப்பங்களின் ஒளிநகல்களைத் தருமாறு கோரியதற்கு ஒளி நகல்கள் திரு B. ரமேஷ் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. திரு B. ரமேஷ் அவர்கள் திரு சோ.குமார் அவர்கள் வசித்து வரும் கதவு எண்.5, வேம்புலி பண்ணைக்காரன் தெரு, உள்ளகரம், சென்னை – 600 091 என்ற முகவரியில் உள்ள வீட்டிற்கான ஆவணங்களின் ஒளி நகல்களை கோரினார். மேற்படி கொடுக்கப்பட்ட தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005 பிரிவு 6 (1)ன் மனுவிற்கு " இக்கட்டிடமானது மிகவும் பழமையான கட்டிடமாகும். இக்கட்டிடத்தின் மீது பெருநகர சென்னை மாநகராட்சியால் நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை " என்ற பதில் தெரிவித்துக்கொள்ளப்பட்டது. தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005 அனைவருக்கும் பொதுவானது. திரு B. ரமேஷ் அவர்களின் அனைத்து தகவல் அறியும் உரிமைச்சட்ட மனுக்களுக்கு தகவல் அளித்தது போல் திரு சோ. குமார் அவர்களின் தகவல் அறியும் உரிமைச்சட்ட மனுக்களுக்கும் தகவல் இவ்வலுவலகம் மூலம் அளிக்கப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார்.

மேலும், திரு B. ரமேஷ் அவர்களின் 28.12.2019 நாளிட்ட தகவல் அறியும் உரிமைச்சட்ட மனுவானது பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 14ல் 30.12.2019 தேதியில் பெறப்பட்டு 22.01.2020–ல் பொது தகவல் அலுவலரால் மனுதாரருக்கு பதிவு அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டுள்ளது.

மேலும், திரு B. ரமேஷ் அவர்கள் மாண்புமிகு தமிழ்நாடு தகவல் ஆணைய ஆணை எண். SA/3140/D/2019/08, நாள். 25.11.2020 ஆணைக்கு இணங்க 14.12.2020 அன்று பதிவு அஞ்சல் மூலம் விவரங்கள் அனுப்பப்பட்டுள்ளன. திரு B. ரமேஷ் அவர்கள் 12.12.2019 அன்று தகவல் அறியும் உரிமைச்சட்ட மனு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 14க்குட்பட்ட மடிப்பாக்கம் உள்ளகரம் புழுதிவாக்கம் பகுதிகளில் கடந்த 3 ஆண்டுகளில் சென்னை மாநகராட்சி கட்டிட அனுமதி பெற்று கட்டப்பட்ட கட்டிடங்களின் விவரங்களை கோரினார். மேற்படி 03.01.2020 அன்று பொது தகவல் அலுவலர் மண்டலம் –14க்குட்பட்ட மடிப்பாக்கம் உள்ளகரம் புழுதிவாக்கம் பகுதிகளைச் சார்ந்த வார்டு 168, 169, 187 மற்றும் 188ல் கடந்த 3 ஆண்டுகளில் 920 கட்டிடங்களுக்கு கட்டிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது என பதில் அனுப்பப்பட்டுள்ளது. இத்தகவல் 03.01.2020 அன்று பதிவு அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டுள்ளது. மேலும் இவ்வலுவலகம் எவ்வித நிதி இழப்பும் அரசுக்கு ஏற்படுத்தவில்லை எனவும் தெரிவித்து உள்ளார். மேலும், மனுதாரர் தகவல் அறியும் உரிமைச்சட்டம் 08.01.2020 நாளிட்ட மனுவில் கோரிய வரிசை எண்.6 சர்வே எண் 70–ற்கான தகவல் வட்டாட்சியர், சோழிங்கநல்லூரைச் சார்ந்ததால் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மேலும் திரு B. ரமேஷ் அவர்களால் தகவல் அறியும் உரிமைச் சட்ட மனுவில் கோரியுள்ள ஆவணங்கள் 03.01.2020 அன்று மாலை 05.10 மணியளவில் மனுதாரரால் பெருநகர சென்னை மாநகராட்சி, 14–வது மண்டல அலுவலகத்தில் பார்வையிடப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார்.

12. முறையீட்டு மனுதாரரின் மனு மற்றும் அவரது வாக்குமூலம், பெருநகர சென்னை மாநகராட்சி 14வது மண்டல அலுவலரின் வாக்குமூலம் மற்றும் 13.07.2021 நாளிட்ட அறிக்கை ஆகியவைகள் இம்முறை மன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

இந்நேர்வில் மனுதாரர் முறையீட்டு மனுவில் குறிப்பிட்டுள்ள கட்டிடத்தை ஆய்வு செய்வதற்கு மாநகராட்சி அலுவலர்கள் 07.12.2019 நாளிட்ட Stop work Notice/Notice calling for approved plan அறிவிப்பு கொடுத்து 07.12.2019 அன்றே ஆய்வு செய்துள்ளனர். ஆனால் 22.02.2017 அன்றே பெருநகர சென்னை மாநகராட்சியால் திட்ட அனுமதி/கட்டிட அனுமதி (planning permission/building permission) PPA/WDCN14/00690/2017 –ல் மேற்கண்ட கட்டிடத்திற்கு வழங்கப்பட்டுள்ளதை ஆவணங்கள் மூலம் அறிய முடிகிறது. மேலும் Tamil Nadu Town and Country Planning Act,1971(Tamil Nadu Act 35 of 1972 as amended by Act 61 of 2008) பிரிவு 56 (1) and 57 read with பிரிவு 85–ன்படி

ஏற்கனவே கட்டிட அனுமதி பெறப்பட்ட அளவைவிட கூடுதலாகவோ அல்லது முரண்பட்டோ கட்டிட உரிமையாளர் வேலையை தொடங்கினால் மட்டுமே Stop work Notice/Notice calling for approved plan அறிவிப்பை வழங்க முடியும். ஆனால் இந்நேர்வில் மனுதாரரால் அவருடைய குடியிருப்பில் எந்தவிதமான கூடுதல் கட்டிடங்களோ, கட்டிட அனுமதிக்கு முரண்பட்டோ எந்த கட்டிட வேலையும் நடைபெறவில்லை என்பதை அறியமுடிகிறது. அவ்வாறு இருக்கையில் திரு. குமார் அவர்கள் கோரிய தகவல் அறியும் உரிமை சட்ட மனுவிற்கு பதில் அளிக்கும் பொருட்டு மாநகராட்சி அலுவலகத்தில் ஏற்கனவே உள்ள ஒரு ஆவணத்தை (document relating to planning and building ) மனுதாரரிடம் கோரியிருப்பதும், இது நடைமுறையில் உள்ள செயல்தான் என்று மண்டல அலுவலர், மண்டலம் –14 தெரிவித்திருப்பதும் ஏற்க்கத்தக்கதல்ல. மேலும் மனுதாரர் திரு B. ரமேஷ் அவர்கள் திரு. சோ.குமார் அவர்கள் வசித்து வரும் வீடு பெரு நகர சென்னை மாநகராட்சியிடம் அனுமதி பெற்று கட்டப்பட்டுள்ளதா ? என்ற விவரத்தையும் மேற்படி வீட்டிற்கு கட்டிட/வரைபட அனுமதி வழங்கப்பட்டிருந்தால் அவற்றின் ஒளிநகல்களையும் தகவல் அறியும் உரிமைச்சட்டம், 2005பிரிவு 6(1)–ன் கீழ் கோரியதற்கு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14–லிருந்து கட்டிட அனுமதி ஏதும் வழங்கப்படவில்லை என தெரிவித்திருப்பது ஏற்கக்கூடியதாக இல்லை. அனுமதி வழங்காவிட்டால் அதன் மேல் நடவடிக்கை எடுக்கவில்லை என்பது நியாயமான சந்தேகத்தை எழுப்புகிறது. கட்டிட/வரைபட அனுமதி வழங்கப்படாமைக்கான நடவடிக்கை/காரணம் எதுவும் குறிப்பிடாதது ஐயப்பாட்டை ஏற்படுத்துகிறது. சம்மந்தப்பட்ட அலுவலர்கள் ஒருதலைபட்சமாகவும் முன் தீர்மானித்த அணுகுமுறையோடு (with prejudicial and preferential mind set) நடந்துள்ளது தெளிவாகிறது. மண்டல அலுவலர்களின் நடவடிக்கை ஒரு சார்புடையதாகவும், திரு. குமார் என்பவருக்கு அளவுக்கு மீறிய முக்கியத்துவம் அளித்து stop work notice அளித்ததும் கண்டிக்கத்தக்கது. இப்படி செய்வதால்தான் கையூட்டு சந்தேகங்களும், உடந்தையாக செயல்படும் குற்றச்சாட்டுக்களும் எழுப்பப்படுகின்றது. தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் தகவல்களை பெற்றுக்கொண்டு கள அலுவலர்களை ஆட்டிப்படைக்கும் செயலை ஏற்றுக்கொள்ளமுடியாது. எனவே திரு.குமார் அவர்கள் வசிக்கும் வீடு அனுமதியின்றி கட்டப்பட்டிருப்பதை அறிந்தும், உரிய சட்டபிரிவுகளின்படி நடவடிக்கை எடுக்கத்தவறிய சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்க பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளருக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

மேலும் மண்டல அலுவலர்கள் தங்கள் கடமைகளை உணர்ந்து நடுநிலையோடு பணியாற்றுவதை உறுதி செய்ய பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அறிவுரைகள் வழங்க ஆலோசனை வழங்கப்படுகிறது.

2021 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 09ஆம் நாளன்று என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1)திரு B. ரமேஷ்,
பிளாட் எண்.32,
ராஜேஸ்வரி நகர் பிரதான சாலை,
உள்ளகரம், சென்னை – 600 091.

2)ஆணையாளர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, பார்க் டவுன்,
சென்னை – 600 003.

3)கண்காணிப்பு பொறியாளர்,
மழைநீர் வடிகால்துறை,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

4)மண்டல அலவலர்,
மண்டலம் –14,
பெருநகர சென்னை மாநகராட்சி,
எண்.6/64, புழுதிவாக்கம் பிரதான சாலை,
புழுதிவாக்கம், சென்னை – 600 091.

நகல்
மாண்புமிகுமுறைமன்ற நடுவர் அவர்களின் தனிச்செயலர்
இ.கோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/

செயலாளர்